பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 சித்திரை 9 ஐ: அலர் 13 இதழ் 70

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-4-78

இந்த அரசாங்கத்தின

# அமைச்சர்கள் வெளி நாடு சென்ற விபரம்

## பேரவையில் பிரேமதாசா தகவல்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் பற்றிய விபரங்களை பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பித்தார்.

ஆனைமடுவ எம் பி யின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு பிரேமதாச கீழ்க் காணும் விபரங்களைத் தெரிவித்தார்.

அமைச்சர்களின் வெளிநாட்டு விஜய விபரம்:

விவசாயக் காணி அமைச்

[6-ம் பக்கம் பார்க்க]

# நாவற்குழியில் ரயில்வே வேலைத்தளம் அமைக்கலாம்

## விசாரணைக் கமிஷனுக்கு யாழ். எம். பி யோசனை

[யாழ்ப்பாணம்]

**ரயில்வே வேலைத்தளம் அமைப்பதற்கு வசதியாக, யாழ்ப்பாணத்தில் நாவற்குழியில் போதிய நிலம் இருக்கிறது. எனவே ரயில்பெட்டி தயாரிப்பது போன்ற வேலைகளைச் செய்வதற்கான வேலைத் தளத்தை இங்கேயே ஆரம்பிக்கலாம்.**

**அனுபவமும், திறமையும் உள்ளவர்களும் இங்கு இருக்கிறார்கள். இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று தச்சுவேலை போன்றவற்றில் பாராட்டைப் பெறும் இவ்வினைஞர்களை இங்கேயே பயன்படுத்திக்கொள்ளலாம்.**

**இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், ரயில்வே கமிஷனுக்கு ஆலோசனை கூறினார்.**

யாழ்ப்பாணத்தில் நடந்த ரயில்வே கமிஷன் விசாரணையில் சாட்சியமளித்தார் யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில், நிறுத்தப்பட்டிருந்த விசேட ரயில்பெட்டியில் இந்த விசாரணை நடைபெற்றது.

இவ்விசாரணை திரு. கி. ஈ ஜெயவர்த்தனா (தலைவர்). திரு. ஏ. ஏ. பேய்ஜ். திரு. ஜி. எஸ். பெர்னாண்டோ முன்னிலையில் நடைபெற்றது. திரு. எஸ். யோகரத்தினம் கமிஷன் செயலாளராகக் கடமையாற்றினார்.

யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது: வடபகுதியில் ருமேனியா பெட்டி சேவைக்கு விடப்பட்டுள்ளதால் பிரயாணிகள் பெரும்கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். சில வாரங்களுக்கு முன் ஒரு வயோதிபமாது ரயிலில் ஏறும்போது தவறிவிழுந்துவிட்டார். சில நிமிடங்கள் மட்டும் ரயில் நிற்பதால், பிரயாணிகள் அவதிப்பட்டு ஏறுகின்றனர். இதற்கு ஏதாவது மாற்றுவழி செய்யவேண்டும்.

வடபகுதியில் சேவை மோசமாக இருக்கிறது. காற்றுடிகள் வேலை செய்வதில்லை. லைட் வேலை செய்வதில்லை. சிலபெட்டிகளில் பல்புகளே இல்லை. கதவு பூட்டு சரியாக இல்லை. கதவைப் பார்த்துக்கொண்டே செல்லவேண்டியிருக்கிறது.

கமிஷனர்: பதுளை எம். பி. யாழ்ப்பாணத்துடன் ஒப்பிடும்போது, தங்கள் பகுதி ரயில் சேவை மேசமானதென்று கூறினார்.

யாழ். எம். பி: கொடிகாமம் ரயில் நிலையத்தில் பிரயாணிகள் அரிக்கன்லாம்புடன் தான் ரயிலில் ஏறவேண்டியிருக்கிறது. போதிய வெளிச்ச வசதியில்லாமல் பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனர். பிரயாணிகள் நெருக்கடியை போக்க கடுகதி சேவையொன்றும் நடாத்தப்படவேண்டும்.

கமிஷனர்: என்ஜின்பெட்டிகள் தட்டுப்பாடாக இருப்பதால், உடனடியாக இக்கஷ்டங்களை நிறைவேற்றமுடியாமல் இருக்கிறது.

யாழ் எம். பி: யாழ். புகையிரத நிலைய நடைபாதைகரை உடனடியாக போடப்பட வேண்டும். 6 அல்லது 7 பெட்டிகள், நடைபாதைக் கரைக்கு அப்பால் நிற்கவேண்டியிருக்கிறது.

கமிஷனர் இதுதொடர்பாக மாவட்ட பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு நிலைமை பற்றி ஆராய்ந்தபின் நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். எம். பி: காங்கேசன்துறை, பளை ரயில் தினமும் தாமதித்து வருவதால் பிரயாணிகள் குறிப்பாக உத்தியோகத்தர்கள், தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனை

(6ம் பக்கம் பார்க்க)

## வண்ணை பெருமாள் ராஜ கோபுர கலசம் சூட்டுவிழா

### இன்று சங்காபிஷேகம்; நாளை குடமுழுக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலேயே மிக உயர்ந்ததும் கலைஅழகு மிக்கதுமான ராஜகோபுரம் என்று கருதப்படும் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் ராஜகோபுரத்துக்குக் கலசங்கள் வைக்கும் வைபவம் நேற்றுக்காலை பக்திசிரத்தையுடன் மிகச்சிறப்பாக நிகழ்ந்தது.

இன்று சனிக்கிழமை காலை சங்காபிஷேகமும், ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ராஜகோபுர மகாகும்பாபிஷேகமும் நடைபெறவிருக்கின்றன.

மலேசியா சென்றிருந்த பெருமாள்கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்கள் ராஜகோபுர கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைக்கும்பொருட்டு சென்ற திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

சுமார் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ராஜகோபுரம், மணிக்கோபுரம் கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்போது காலையிலிருந்து இரவுவரை நாதஸ்வர மேளக் கச்சேரிகளும பஜனை, பக்திப் பாடல்கள் வில்லிசைக்குழு முதலிய பல நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### வாசகர் கவனத்திற்கு

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய இராஜ கோபுர மகா கும்பாபிஷேக நினைவாக மில்க் வைற் நிறுவனத்தின் பிரசுரமொன்று நாளை ஞாயிறு வாரமலரில் இலவசமாக இணைக்கப்பட்டிருக்கும். ஆர்-

## உயிரோடு இருக்கிறார்!

ரோம், ஏப். 21

கொரில்லாக்களினால் கடத்திச்செல்லப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட இத்தாலிய முன்னாள் பிரதமர் திரு. அல்டோ மொரோ தாம் உயிருடனிருப்பதாக இன்று கடிதமூலம் ரோமுக்கு அறிவித்துள்ளார் என்று இத்தா

[6-ம் பக்கம் பார்க்க]

# "ஆசிரியபயிற்சிக்கு" வந்த

## மாணவர்கள் ஆத்திரம்; ஏமாற்றம்?

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலையில் நேற்றுக் காலை ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த ஆசிரியர் பயிற்சிக்கு வந்திருந்த சுமார் ஆயிரம் பேர் பலத்த ஏமாற்றத்துடன் திரும்பவேண்டிய நிலையேற்பட்டது இவர்களில் 80 வீத மானோர் பெண்களாவர்.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை முன்னாள் அதிபர் திரு. கே. கே. காசிப்பிள்ளை இந்த ஆசிரியர் பயிற்சி வகுப்பு ஒழுங்கு பற்றிப் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

நேற்றுக் காலை, மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா மன்னார், கொழும்பு உட்படப் பல இடங்களிலிருந்தும் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு சுமார் ஆயிரம் பேர் வந்திருந்தனர். காலை 9 மணிக்கு டாக்ஸி ஒன்றில் திரு காசிப்பிள்ளை வந்து சேர்ந்தார்.

இப்பயிற்சி வகுப்பு நடாத்த அவர் அனுமதிபெறவில்லை என அறிந்திருந்த சிலர் அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். அவர் மாணவிகளை ஒரு மர நிழலுக்கு அழைத்துச் சென்று உரை நிகழ்த்த ஆரம்பித்தார். அவரின் செயலில் பொறுமை இழந்த சில வாலிபர்கள் அவரைத் தாக்க முயற்சிக்கவே அவர் டாக்ஸியில் ஏறிச் சென்றுவிட்டார்.

பயிற்சி வகுப்பிற்குத் தெரிவு செய்யப்பட்டும் மாணவர்கள், பதிவுப் பத்திரப்பணமாக 10 ரூபாவும், ரியூஷனுக்கு 100 ரூபாவும், விடுதிக்கு 60 ரூபாவும் செலுத்தவேண்டுமென்றும் அடுத்த புதன்கிழமை வகுப்பு ஆரம்பமாகுமெனறும் அவர் தெரிவித்தாராம்.

மாணவிகளில் ஒரு பகுதியினரை, கஸ்தூரியார் வீதியிலுள்ள காரியாலயத்திற்கு வரும்படியும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்கள், இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், வட மாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகருக்கும்

(6ம் பக்கம் பார்க்க)

## குழாயில் உருவாகும் குழந்தை

(லண்டன்)

செயற்கை சோதனைக் குழாயில் உருவாகி வரும் மனிதக் குழந்தை எதிர்வரும் ஜூலை மாதம் பிறந்துவிடும் என்று டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

லண்டனிலுள்ள லங்காஷயர் ஆஸ்பத்திரியில் சோதனை முறையிலான இக் குழந்தையை டாக்டர்கள் உருவாக்கி வருகிறார்கள்

சோதனைக்குழாயில் இக் குழந்தை உருவாகி வருகின்றது. யூலை மாதம் இக் குழந்தை பூரணமாகிவிடும் என்று டாக்டர் ருபர்ட் எட்வர்ட்ஸ் அறிவித்துள்ளார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சஇ 14231
இல 6, புது வீதி, கோய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்
காலம்சென்ற சந்தியோகுபிள்ளை மாசிஸ் ஜோஜ்
—வழக்காளி

809, அளுத்துமாவத்தை ரோட், முகத்துவாரம்
கொழும்பு

சந்தியோகுப்பிள்ளை மாக்ஸ் அல்பிறட்
—பதில் வழக்காளி

எதிராக

38, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்
1. மாணிக்கம் செல்லத்துரையும் பெண்
2. அன்று லீ யேசம்மாவும்
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் சடு 14231ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978ம் ஆண்டு (3-5-78) வைகாசி மாதம் 3ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 5254/-ம் 10-12-73 தொடக்கம் 11-7-74 வரைக்கும் ரூபாய் 3700/-க்கு 12% வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 478/05. இதில் ரூபாய் 200/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று கண்டிக்குளி இறை "மாவிலங்கையடி வயல்" நெ. பரப்பு 1½ம் விதும், இணறும் பயிர்வகைகளும், இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு வெள்ளையப்பர் சாமுவேலுந்தம் பெண் முத்தம்மாவுக்குமுரிய ஆதனம், மேற்கு யோசேப்பு பெண் அன்னம்மாவுக்கும் வைத்தி யேம்ஸ்சுவுக்குமுரிய ஆதனம், தெற்கு சவரிமுத்து பெண் ஆச்சிமுத்துவிஞதனம், இதடங்கலும்.

நா. ஸ்ரீரங்கநாதன்
விற்பனவு ஆணையாளரும்,
விலைமதிப்பாளரும்.

6, கன்னுதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
13-3-78
9110

வலிகாமம் மேற்கு
ஒம்னி பஸ் கம்பெனி பங்காளர்களுக்கு

## அறிவித்தல்

வலிகாமம் மேற்கு ஒம்னி பஸ் கம்பெனிப் பங்காளரின் விசேஷ பொதுக்கூட்டம் 1978ம் ஆண்டு சித்திரை மாதம் 11ந் திகதி 24-4-78 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ரோட், 162, 164, 166ம் இலக்கங்களையுடைய கட்டிடத்தின் மேன்மாடியில் நடைபெறும். தயவு செய்து சமுகம் கொடுக்கவும்.

க. ஆறுமுகம்
காரியதரிசி

7-4-78
9106

## கருவாட்டு ஏலவிற்பனை

எம்மால் உற்பத்தி செய்யப்படும் கருவாடுகளை ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சங்கக் காரியாலயத்தில் காலை 11 மணியளவில் சங்க நிபந்தனைக்கு அமைய ஏலவிற்பனைக்கு விடப்படும்.

தலைவர்
ஊர்காவற்றுறை க. தொ. க:
சங்கம்;

9108

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அரியாலையில் நகர எல்லையிலிருந்து இரண்டரை மைல் தூரத்தில் பலபாதையில் தென்னை விவசாயம் குடியிருக்க உகந்த 4½ ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. விளம்பர இல: 9056 மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.
9056

நல்ல நிலையிலுள்ள 6 ஸ்ரீ 2900 தொடர் இலக்கமுள்ள லம்பிறட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: இல. 11, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 9103

## கேள்விவிளம்பரம்

சாவகச்சேரி
நகரசபை

சாவகச்சேரி நகரசபை சுகாதார மேற்பார்வையாளர், வருமான மேற்பார்வையாளர்கள், சந்தை வரிவசூலிப்பாளர்கள் ஆகியோருக்கான கோலவுடைகள் வழங்குவதற்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் 11-5-78 மு. ப 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் 1978ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி (8-5-78) ந. ப. 12-00 மணி வரை, இவ்வலுவலகத்தில் ரூபா 50/- பிணைப்பணமும் திருப்பித்தரப்படாத ரூபா 5/- கேள்விப்பத்திரப் பணமும் செலுத்தியதின் பேரில் வழங்கப்படும்.

கேள்விகள் விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு தபாலுறையின் இடது கை மேலுறையில் "கோலவுடைக்கான கேள்விகள் 1978" என எழுதப்பட்டு பதிவுக் கடிதத்தின் மூலம் 11-5-78 மு. ப 10-00 மணிக்குக் கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடப்படல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கட்டளையிடப்படும் திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் இக்காரியாலயத்திற்குச் சமூகந் தந்து கோலவுடைக்குரியவர்களின் அளவுகளை எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

இவைகளைப் பற்றிய வேறு விபரங்கள் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

த. நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
19-4-78. 9102

## L. P. காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். L. P. காஸ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் !

எஸ். பி. சாமி அன் கோ.
193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7025

தலைமைக் காரியாலயம்,
73, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன் : 22640.

## ட்ராக்டர்- ஸ்கூட்டர் விபத்து

### ஒருவர் பலி

[மாவிட்டபுரம்]

கீரிமலையில் நடந்த ட்ராக்டர்-ஸ்கூட்டர்விபத்தில்52வயதான விவசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே மாண்டார்.

இளவாலையைச் சேர்ந்த பத்திநாதர் என்றவிவசாயியே இவ்விபத்தில் மாண்டவராவார்.

கீரிமலையிலிருந்து பன்னாலை நோக்கிச் சென்ற ஸ்கூட்டரில் பின்னாலிருந்து சென்ற காலஞ்சென்றவர் எதிரே வந்த ட்ராக்டருடன் மோதியதால் விபத்து சம்பவித்தது.

இம்மரணம் குறித்து விசாரணை நடாத்திய மல்லாகம் மாஜிஸ்ரேட், ட்ராக்டர் சாரதியை 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

காங்கேசன்துறை பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். (உ)

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி

## ஆதனவரி அறிவித்தல்

1978ம் ஆண்டு 1ம் கந்தாயத்துக்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 28-4-78ம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, நீங்கள் செலுத்தவேண்டிய வரிகளை 28-4-78ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின், ஆதனவரியுடன் பத்து வீதம் பற்றுணைப் பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

த நவரத்தினராசா
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
19-4-78. 9101

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## வரி விளம்பரம்

### தேவை

நவராத்திரிக் காலங்களில் மரம் நாட்டுவிழா நிகழ்த்துவதற்கு நெல்லிக்கன்றுகள் தேவை. அவற்றை உண்டாக்கித் தருபவர்களுக்கு தருந்த வெகுமதி தருவோம். மிக்கவற், யாழ்ப்பாணம்.
9063

மேற்பார்வையாளர், லேத்மன் (Lathemen), கம்மாலை வேலை செய்பவர்கள், வெல்டர்கள் (Gas & Electric) தேவை. அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9021

கொழும்பு றெஸ்ரோரன் வெயிற்றர், பார்கீப்பர், திறமை வாய்ந்த சமையல்காரர் உடன் தேவை. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். நம் 77, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 9051

ஐந்து வருட பிடவை வியாபார அனுபவமுள்ள பிடவை விற்பனையாளர்கள் தேவை. இருபாலாராலும் நேரில் தொடர்பு கொள்ளலாம். க. நாகமுத்து அன்சன், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
9095

வவனியாவிலுள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய வாள்றைவர் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9082 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
9082

### அகதிகள் புனர்வாழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வாராந்தக்கருத்தரங்கு இன்று யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் தலைமையில் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலகத்தில் நடைபெறுகிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு/316
1. தம்பு கிருஷ்ணபிள்ளையும் பெண்
2. பரமேஸ்வரியும்-இருவரும் பாலாவோடை காரைநகர்.
வழக்காளி

எதிராக
1. வேலுப்பிள்ளை பாலசிங்கமும் பெண்
2. செல்லம்மாவும்- பாலாவோடை காரைநகர்
2ம் எதிராளி காலம் சென்ற காசிநாதர் கணபதிப்பிள்ளை பெண் கதிராசிப்பிள்ளையின் ஆதனங்களுக்கு சட்டப்படி பிரதிநிதியாக நியமனம் செய்யப்பட்டவர்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு/316-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் வருடம் வைகாசி மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 6344/-ம் 11-11-76 தொடக்கம் இறுக்கும்வரை 9% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 690/15-ம்.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை 'நிந்தாவடைப் புக்கொட்டை புலமும் காரைத்தாழ்வும்' நி. பர. [5] ஐந்தும் பனைகள் வடலிகள் வீடுகளும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு மார்க்கண்டு கைம்பெண் சுந்தரம்மாவினுதனம். வடக்கு சிற்றம்பலம் கைம்பெண் அபிராமியினதும் மறுஆதனமும். மேற்கு அம்பலவாணர் சின்னக்குட்டியினுதனம். தெற்கு பொன்னம்பலம் பெண் தெய்வானையினுதனமும். ஒழுங்கை மூகப்பும் சின்னக்குட்டி பெண் சுந்தரத்தினுதனமும் இடங்கலும் முற்பதிவு இல. C 340/211

ஜே. எ. எட்வேட்
கொம்மிஷனர் &
விலை மதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு
ஊர்காவற்றுறை.
19-4-78
9104

ஈழநாடு
The Eelanaadu

## லீ யின் யோசனைகள்

சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூ தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியிருக்கிறார்.

இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு சிங்கப்பூர் சகல துறைகளிலும் உதவுமென்று சிங்கப்பூர் பிரதமர் உறுதியளித்திருக்கிறார். சிங்கப்பூரிலுள்ள முதலீடு செய்யக்கூடியவர்களை இலங்கையில் முதலீடு செய்வதற்கு ஊக்கமளிக்குமென்றும் திரு. லீ தெரிவித்திருக்கிறார்.

சுதந்திர வர்த்தக வலயம் வெற்றிபெறுவது அதை நடத்துவதில்தான் தங்கியிருக்கிறதென்பதைச் சிங்கப்பூர் பிரதமர் தெளிவாகக் கூறியிருக்கிறார். சுதந்திர வர்த்தகவலயம் உடனடியாகப் பயன்கிடைத்து விடுமென்று எவரும் கருதக்கூடாதென்றும் அது பயன் தருவதற்கும் குறைந்தது ஐந்து ஆறு வருடங்களாவது செல்லுமென்றும் அவர் சரியாகச் சொல்லியிருக்கிறார்.

சுதந்திர வர்த்தகவலயம் அமைந்தவுடன் நாட்டில் தேனும் பாலும் ஒடுமென்றும் செல்வம் கொழிக்குமென்றும் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

சுதந்திர வர்த்தகவலயம் பற்றி நன்கு அனுபவம் பெற்ற சிங்கப்பூர் பிரதமரின் கருத்து இங்குள்ளவர்களுக்கு நல்ல அறிவுரையாக அமையவேண்டும்.

தமது நாட்டில் சுதந்திர வர்த்தகவலயம் ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் எதிர் நோக்கவேண்டி யேற்பட்ட பிரச்னைகள் பற்றியும் பிரதமர் லீ எடுத்துக்கூறியிருக்கிறார்.

இவையெல்லாவற்றையும் விட பொருளாதார சமுதாய முன்னேற்றத்தைக் காண்பதற்கு அமைதியும் ஸ்திரநிலையும் முக்கியமென்பதைப் பிரதமர் லீ எடுத்துக்காட்டியிருப்பது அரசாங்கத்துக்கு மட்டுமல்ல இந்த நாட்டுத் தலைவர்களின் கண்களைத் திறக்க உதவவேண்டும்.

ஆட்சிகள் மாறலாம்; ஆனால் நாடு ஒன்றேதான். எந்தக்கட்சி ஆட்சி பீடத்துக்கு வந்தாலும் பொருளாதாரசமுதாய முன்னேற்றம் அவசியம்.

இதற்கு அமைதியும் ஸ்திரமும் மிகவும் முக்கியமானவை.

ஆட்சிபீடத்துக்கு வருபவர்கள் எல்லோருமே நாட்டை முன்னேற்றுவது தான் தங்கள் ஒரே இலட்சியமென்றும் பொருளாதார விடுதலை காண்போம் என்றும் உறுதியளிக்கிறார்கள்.

ஆனால் இலங்கை சுதந்திரமடைந்து முப்பதாண்டுகளான பின்புங்கூட இன்னமும் பொருளாதார முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை.

நாட்டில் அமைதியை ஏற்படுத்தமுடியவில்லை எந்நேரமும் பதட்டநிலையே நிலவுகின்றது.

ஏன் இந்த நிலை?

நாட்டில் அமைதியையும் ஸ்திரநிலையையும் ஏற்படுத்துவதற்கு வழி என்ன?

நாட்டின் நலன்கருதி கட்சிவேறுபாடுகளையும் கொள்கைவேறுபாடுகளையும் மறந்து அரசியல், சமய, சமூகத் தலைவர்கள் ஒன்றுகூடி நல்லமுடிவு காணவேண்டிய அவசியம் இன்றுபோல் வேறு என்றுமே இருந்ததில்லை.

சிங்கப்பூர் பிரதமரின் இலங்கை விஜயம் சிங்கப்பூரைவிட இலங்கைக்கே அதிகநன்மை அளித்திருக்கிறதென்று சொல்லலாம். இதை இலங்கை நன்குபடன் படுத்திக் கொளுமென்று எதிர்பார்ப்போம்.

# "தமிழ்த்தெய்வம் முருகன் துணையுடன் தமிழ் அரசு மலரும்"

## மாவையில் 'அமிர்' உரை

[மாவிட்டபுரம்]

"ஈழத்தில் முழுமையான தமிழரசு இருந்தமைக்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கும் இடையில் தொடர்பு உண்டு. மீண்டும் ஈழத்தில் தமிழரசு உருவாக தமிழ்த் தெய்வம் மாவை கந்தனின் அருள வேண்டும்."

காங்கேசன்துறை தொகுதி உறுப்பினர் திரு. ஏ. அமிர்தலிங்கம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இசையரங்கை ஆரம்பித்து பேசுகையில் கூறினார்.

ஆலயஆதீனகர்த்தாபிரம்மஸ்ரீ சு. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில்:

கண்கண்ட தெய்வம்

பழமையும், புதுமையும், சரித்திர வரலாற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது மாவை ஆலயம். தமிழர் ஆட்சிக் காலத்தில் மாருதப் புரவீக வல்லி-உக்கிரம சிங்கன் ஆட்சியிலேயே முழுமையான தமிழ் அரசு ஈழத்தில் இருந்துள்ளது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான முருகன் துணையுடன் மீண்டும் ஒரு தமிழரசை ஏற்படுத்த முனைய வேண்டும்.



அண்மையில் நடந்த கலவர காலத்தில் எம்மக்களுக்கு கொடுமைகள் பல இழைக்கப்பட்டன, கோவில்கள் இடிக்கப்பட்டன. இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தெய்வங்கள் சும்மா இருப்பதாக நாம் கருதமுடியாது 'அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும்' என்பது ஆன்றோர் மொழி. அந்த ஆன்றோர் மொழி விரைவில் உண்மையாகத்தான் போகிறது. அந்த நிலைக்கு எம்மை நாம் தயார் செய்ய வேண்டியது அவசியமானது' என்றார். (உ)

# ஆசிரியர் இடமாற்றம் ஜூன் 30-க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

(உடுப்பிட்டி)

1979ம் வருடம் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் தாம் கடமையாற்றும் பிராந்தியக் கல்விப்பணிப்பாளருக்கு அல்லது பிரதான கல்வி அதிகாரிக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளது.

இவ்வாறு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் பின்வரும் தகைமையைக் கொண்டிருக்கவேண்டும் எனவும் அவ்வாறான விண்ணப்பங்களே இடமாற்ற சபையின் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

0 நியமன விதிகளின்படி குறிப்பிட்ட காலம் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றும்படி விதிக்கப்படாத கஷ்டமான் பிரதேசங்களில் 2 வருட சேவை அல்லது கஷ்டமற்ற பிரதேசங்களில் 4 வருட சேவையைக் கொண்டுள்ள ஆசிரியர்கள்.

0 மேல் மாகாணம் அல்லது கண்டி நகரப் பாடசாலைகளில் நான்கு வருடங்கள் அல்லது அதற்குமேல் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள்.

0 யாழ் மாவட்டத்தில் ஆறு வருடங்கள் அல்லது அதற்கு மேல் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள்.

0 ஒத்தமாறுதல் (ஆசிரியர்கள் இருவரும் சமதகைமையுடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறான ஒத்து மாறுதல் விண்ணப்பங்களை மீளப்பெற விரும்பின் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இருவரினதும் சம்மதம் அவசியமானதாகும்.)

0 வைத்திய காரணங்களுக்காகவும், சுகவீனத்தால் பீடிக்கப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரி ஒருவர் அல்லது வைத்திய நிபுணர் ஒருவரால் சிபாரிசு செய்யப்படும் பிரதேசத்திற்கு.

0 கணவன் மனைவி தொடர்பிலான காரணங்களுக்காக இரு வருடங்களாவது அரச பாடசாலைச் சேவையைப் பூர்த்தி செய்துள்ள மனைவியொருவர் தனது கணவன் சேவையாற்றும் மாவட்டத்திற்கு இடமாற்றம் கோரமுடியும். (இ)

## முதலைமார்க் மண்வெட்டிகள் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

பிரபல்யம்பெற்ற முதலைமார்க் மண்வெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஏ. ஏ. ஜோசேப் எடுத்த முயற்சியினால் யாழ்ப்பாண மாவட்டத்திலும் இந்த மண்வெட்டிகள் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த மண்வெட்டி தேவையானவர்கள் தத்தமது பகுதியிலுள்ள விவசாய விரிவாக்கல் குழு அலுவலகங்களுக்குச் சென்று தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்வதுடன் மண்வெட்டிக்கான முற்பணமும் செலுத்த வேண்டுமென்று அறிவிக்கப்படுகிறது.

## சுதந்திர வர்த்தக வலயம்:

# முதலீடு செய்வதில் சிங்கைப் பிரதமர் விருப்பம்

(கொழும்பு)

இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு சிங்கப்பூர் அரசு தன்னாலியன்ற அளவில் உதவி புரியும் என்று சிங்கப்பூர் பிரதம மந்திரி திரு. லீ குவான்யூ நேற்று தாய்நாடு திரும்புவதற்கு முன்பு ஒட்டல் ஒப்ரேயில் நடத்திய பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் கூறினார்.

கப்பல் கட்டுவது, ஜவுளி உற்பத்தி, எலக்ட்ரோனிக் பொருட்கள் உற்பத்தி போன்றவற்றில் சிங்கப்பூர் அரசின் உதவியை இலங்கை கேட்டிருப்பதாகவும் இத்துறைகளில் உதவிகள் புரிவதுபற்றி ஆலோசிக்கப்படும் என்றும் பிரதமர் லீ கூறினார்.

வர்த்தக வலயத்திட்டம் உடனடியாகப் பயன் அளிக்காது என்றும் சிங்கப்பூரிலும் கூட வர்த்தக வலயம் பயனளிக்க சில வருடங்கள் பிடித்தன, என்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் முதலில் முதலீடு செய்வதற்கு தயங்கியதாகவும் கூறிய பிரதமர் லீ காலப்போக்கிலேயே இத்திட்டம் நல்ல பயனளிக்கும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா ஆசியான் ஸ்தாபனத்தில் சேர்வது பற்றி அக்கறை கொண்டிருப்பதாகவும் இது பற்றி தம்முடன் ஆலோசனை நடத்தியதாகவும் அவர் கூறினார். [ம]

## மணிவாக்கு

இவ்வுலகில் ஒவ்வொருவனும் தன்னை அறிவாளி என்று எண்ணிக்கொள்வதால் தான் இவ்வுலகில் இத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள்

—ஹங்கேரிய பொன்மொழி

## ஸ்ரீஇராமகிருஷ்ணர் பேச்சுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீராமகிருஷ்ண ஜெயந்தி விழா இலங்கை ஸ்ரீராமகிருஷ்ண சேவாச்ரமத்தின் ஆதரவில் கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு சேவாச்ரமத் தலைவர் திரு ஆ. தட்சணாமூர்த்தி தலைமைவகித்தார். பேச்சுப்போட்டியில் பரிசுபெற்றோரின் விபரம் பின்வருமாறு:

அதிமேற்பிரிவு பெண்கள்:- ச. இந்திரகுமாரி, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை. மேற்பிரிவு பெண்கள்: மு. கலாராணி, ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதாமகளிர் கல்லூரி, கொக்குவில் மத்தியபிரிவு: ஆண்கள்- த. சிவஸ்ரீ பருத்தித்துறை, மத்தியபிரிவு: பெண்கள் - ப.கமலஜோதி, பருத்தித்துறை, கீழ்ப்பிரிவு: ஆண்கள். செ. விக்கினேஸ்வரன் யூனியன் கல்லூரி தெல்லிப்பளை, கீழ்ப் பிரிவு பெண்கள்; ப. ஜெயந்தி யூனியன் கல்லூரி தெல்லிப்பளை, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தொழில் அதிபர் திரு.க. கனகராசா தமது உரையின்போது சமயவாழ்க்கையின்படி ஒழுகினால் மக்களிடையே நல்லொழுக்கம் நிலைபெறும் என்பதனை வற்புறுத்திக்கூறினார். திருமதி கனகராஜா பேச்சுப்போட்டியிலும் கட்டுரைப்போட்டியிலும் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

சிறப்பு நிகழ்ச்சியாக ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கையைப் பற்றிய முழு நீள திரைப்படம் காண்பிக்கப்பட்டது. திருமதி சரஸ்வதி தேவி கணேஸ்வரன் படவிளக்கங்களை அளித்தார். செயலாளரின் நன்றியுரை கூறினார்.

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

அதிமேற்பிரிவு: புவனேஸ்வரி சுப்பிரமணியம், பருத்தித்துறை. கனகசபை பரமேஸ்வரன், கொக்குவில் மேற்கு, கொக்குவில். குட்டித்தம்பி விஜயகுமாரன்; முள்ளியவளை.

மேற்பிரிவு: வசந்தா செல்லத்துரை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா மகளிர்கல்லூரி. கலைவாணி வேதாரணியம், ஸ்ரீஇராமகிருஷ்ண சேவாச்சிரமம் கலாராணி சின்னத்தம்பி, ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா மகளிர்கல்லூரி, கொக்குவில்.

மத்தியபிரிவு: கீதாஞ்சலி பஞ்சலிங்கம், வேம்படிமகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். பாமினி இராமநாதன், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை, கணேசானந்தன் சபாரட்ண சர்மா, மகாஜனகல்லூரி, தெல்லிப்பளை. (உ)

நீர்வேலிக் கந்தசுவாமி கோவில் ரதோற்சவ விழா இன்று நடைபெறுகிறது

## இளையவனே எமக்கு அருள் நல்குவாயே

காரேறு குன்றினிலே நடனமாடிக்
கண்குளிரப் பக்தர்களுக் கருளும்வேலா!
சீரேறும் மறையதனை அகத்தியர்க்குச்
செம்மியே சிவனுக்கும் உபதேசித்தாய்!
ஏரேறும் நீர்வேலித் திருத்தலத்தில்
எமதுகண் குளமாகிக் கருணைபொங்கத்
தேரேறி வருமுருகா! தேவதேவே!
தீராநோய் தீர்த்தருள வருகுவாயே.
தேரேறி வருகோலம் காண்பதற்குத்
திகழாயிரங்கண்கள் வேண்டுமைய்யா!
சீரான நின்கோலம் கண்டுகூப்பச்
செய்யகரம் ஆயிரங்கள் வேண்டும்ப்பா!
நேரேவரு மில்லாத நினதுகோலம்
நினைப்பதற்கு நெஞ்சமாயிரங்கள்வேண்டும்
ஏராரும் நீர்வேலி அமர்ந்த கோவே!
இளையவனே! எமக்கு அருள் நல்குவாயே.

—நீர்வையூர் பண்டிதர் நீ. சி. முருகேசு

# இந்திய லோகசபையில் அமளி துமளி!

## உள்துறை அமைச்சரைப் பேசவிடாது ஜனதா கட்சியினரும் கூச்சல்!!

புதுடில்லி, ஏப். 21

இந்திய லோகசபையில் நேற்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் பேசிக்கொண்டிருக்கையில் பெரும் அமளி ஏற்பட்டது. இந்திரா காங்கிரஸ் கட்சி எம். பி.க்களும் ஆளும் கட்சி உறுப்பினர்களும் திரு. சரண்சிங்கை உரையாற்ற விடாமல் தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டே இருந்தனர். இதன்காரணமாக குழப்பநிலையில் கூட்டம் வழமையைவிட அதிகநேரம் நடைபெற்றபோதிலும் உள்துறை அமைச்சர் மேற்கொண்டு உரைநிகழ்த்த முடியாது இடையில் நிறுத்திக்கொண்டார்.

அவர் தமது உரையைநிறுத்திக்கொண்டபோதிலும் அவரின் வேண்டுகோளின் பேரில் உரை முடிந்துவிட்டதாகக் கூறிய சபாநாயகர் சபை நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டார். எனினும் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களும் சில எதிர்க் கட்சி உறுப்பினர்களும் சபையைவிட்டுவெளியேறவில்லை.

உள்துறை அமைச்சரின் விவாதம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று கோரிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஸ்டீபன், விவாதம் தொடராவிட்டால் தாம் சபையை விட்டு வெளியேறப் போவதில்லை என்று சவால் விட்டவாறு அங்கிருந்துவெளியேற மறுத்துவிட்டார்.

அடுத்த அமைச்சர்களான திருவாளர்கள் ஜெகஜீவன் ராம், ரவீந்திரவர்மா ஆகியோர் திரு. ஸ்டீபனை சமாதானப்படுத்தி சபையைவிட்டு வெளியேற முயற்சித்தனர்.

இறுதியில் திரு. சரண்சிங்கின் விவாதம் எதிர்வரும் திங்கட்கிழமை தொடர்ந்துநடைபெறும் என்று கூறியபின்னரே திரு. ஸ்டீபனும் மற்றும் உறுப்பினர்களும் இரவு 9 மணிக்குப் பின்னர் சபையைவிட்டு வெளியேறினர். (இ)

## "சட்டம் ஒழுங்குப் பிரச்னையை கட்சி விவகாரமாக்காதீர்"

புதுடில்லி, ஏப். 24

சட்டமும் ஒழுங்கும் தொடர்பான பிரச்னைகளை கட்சி விவகார மாக்கி விடாதீர்கள் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் நேற்று லோகசபையில் சகல கட்சித் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

அண்மைக்காலத்தில் நாட்டில் சில இடங்களில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்டது குறித்துக்கவலை தெரிவித்த திரு. சரண்சிங், இந்நிலை தற்காலிகமானது ஒருபோதும் நீடிக்க மாட்டாது என்றும் கூறினார்.

அண்மைக்காலத்தில் சட்டமும் ஒழுங்கும் பாதிக்கப்பட்டதற்கு பொலிஸார் அல்ல அரசே காரணம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்குப்பதில் அளிக்கையிலேயே திரு. சரண்சிங் மேற்கண்டவாறு கூறினார். (இ)

## மத்திய கிழக்கு அமைதி: தயான் யு. எஸ். விஜயம்

ஜெருஸலம், ஏப். 21

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வான்ஸுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் திரு. மோஸே தயான் அடுத்த செவ்வாய்க்கிழமை வாஷிங்டன் செல்கிறார் என்று ஜெருஸலம்செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க- இஸ்ரேல் உறவுகள் அண்மையில் பாதிக்கப்பட்ட பின்னர் இஸ்ரேலியத் தலைவர் ஒருவர் முதல் தடவையாக அமெரிக்கா செல்கிறார்.

இதே வேளையில், மத்திய கிழக்கு விவகாரம் தொடர்பான அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரின் விசேட தூதுவர் திரு. அதேட்டன் இன்று இஸ்ரேலியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக ஜெருஸலம் வந்துள்ளார். (இ)

## "விளையாட்டுக் கழகங்கள் யாவும் ஒன்றுபட்டுழைத்தால் நல்லபலன் கிடைக்கும்"

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாணத்தின் உதைபந்தாட்டத் தரத்தை உயர்த்துவதற்கு, விளையாட்டுக் கழகங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு உழைத்தால்தான் நாம் நல்ல பலனை அடையமுடியும்."

இவ்வாறு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. வி. பிலிப்ஸ், மினி' நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினார்.

டாக்டர் பிலிப்ஸ் மேலும் கூறியதாவது: "நான் மேற்படி லீக்கின், புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின், கடந்த வருடம் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக யாழ். உதைபந்தாட்ட லீக்கிலிருந்து பிரிந்த இரு கழகங்களும், புதிதாக இரு கழகங்களும் எமது லீக்குடன் இணைந்து கொண்டதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனால் நீண்ட காலமாக இயங்கி வந்த "ஜொலிஸ்டார்" விளையாட்டுக் கழகம் மட்டும்தான் இன்னும் எம்முடன் இணையாது தனித்து நிற்கின்றது. இக்கழகமும் யாழ்ப்பாணத்தின் உதைபந்தாட்டத் தரத்தை உயர்த்துவதற்கு எம்முடன் விரைவில் இணைந்துழைக்க முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென். மேரிஸ் கழகமும் மோதிய சாம்பியன் போட்டியில், சென். அன்ரனிஸ் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற கழகத்துக்கு யாழ். பேரவை உறுப்பினர் திரு. வே. லோகேஸ்வரன் வெற்றிக் கேடயத்தைப் பரிசளித்தார்.

யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படிச் சாம்பியன் மோதலுக்கு திரு. எஸ். பிலேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். (அ)

## அமெரிக்காவில் 'அயடின்' மழை

நியூயோர்க், ஏப் 21

அமெரிக்க மக்கள் ஆவலோடு காத்திருந்த வசந்த காலமழை இம்முறையும் வரவே செய்தது. ஆனால் இம்முறை அது ஒரு ஆபத்தையும் தன்னோடு அழைத்து வந்துள்ளது.

அமெரிக்க காலநிலை அவதான நிலையத்தினரது தகவல்களின் பிரகாரம், அண்மையில் சீனா மேற்கொண்ட அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனையொன்றின் விளைவாக அமெரிக்காவின் அண்மித்த வளிமண்டலத்தில் கலந்துவிட்ட கதிரியக்க 'அயடின்-131' நச்சுத் துகள்கள் இம்முறை பெய்த மழையின் ஒவ்வொரு துளியிலும் கலந்திருந்ததாம்.

இதுபற்றி அணுகுண்டு வெடிப்புப் பரிசோதனைகளுக்கு எதிரான அமெரிக்க வெகுஜன இயக்கத்தின் தலைவர் றிச்சார்ட் பொலொக் பின்வருமாறு கூறினார்.

'அண்மையில் சீனா மேற்கொண்ட அணுகுண்டு வெடிப்பு பரிசோதனை அமெரிக்காவின் அண்மித்த வளிமண்டலத்தை பெருமளவில் நச்சுப்படுத்தியுள்ளது. 'அயடின்-131 நச்சுத்தூள் கலந்த மழையினால் மரக்கறி, பழத்தோட்டங்கள் நச்சுப்படுத்தப்பட்டுள்ளது, நச்சுப்படுத்தப்பட்ட புல்தரையில் மேயும் பசு மாடுகள் நோய்வாய்ப்பட்டுள்ளன. இப்பசுமாடுகளிலிருந்துபெறப்படும் பாலினை உட்கொள்ளும் மனிதர்களும் புற்றுநோய் முதலான நோய்களால் பாதிக்கப்பட இடமுண்டு!'

## வெங்காயச் செய்கை: விவசாய அதிகாரி அறிவுரை

(யாழ்ப்பாணம்)

"வெங்காயம் நாட்டி, நிலம் காயமுன், உடன் ஒரு ஏக்கருக்கு 30 றுத்தல் காபோபியுறன் மூன்று வீதம் குறுனல் தூவவும் இது 30 நாட்கள் வரை புழுவைக் கட்டுப்படுத்தும்" என்று யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு. என். சிவமுத்துலிங்கம் விவசாயிகளுக்கு அறிவுரை கூறியுள்ளார்.

30ல் இருந்து 45 நாள்வரை ஐந்து நாளைக்கு ஒருதடவை சுமிசிடின் 25 வீதம் ஈ. சி. அல்லது அம்புஷ் (பெமித்றின்) 21 ஈ சி (செறிதிரவம்) ஏக்கருக்கு ஒரு அவுன்ஸ் 50 கலன் நீரில்கலந்து விசுறுமாறும்அவர் தெரிவித்துள்ளார்:

வெங்காயம் நாட்டி 45 நாட்களுக்குப்பின் இப்புழுவின் தாக்கம் விளைச்சலை அதிகம் பாதிக்காதென்றும் மேற்படி கிருமிநாசினிகளைத் தவிர பேறுஇல் ஒருஅவுன்ஸ் இரண்டு கலன் நீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு 50 கலனை விசுறவும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## சாம்பியனாகத் தெரிவு

[சுழிபுரம்]

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் அராலி சில்வண்டர் கோஷ்டி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

### விவசாயிகள் கிளர்ச்சி:

## குற்றம் சுமத்தப்பட்டோர் தவிர அனைவருக்கும் விடுதலை

### தமிழக அரசு தீர்மானம்

சென்னை, ஏப். 21

அண்மையில் தமிழ்நாட்டில் இடம்பெற்ற விவசாயிகள் கிளர்ச்சியை அடுத்து கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ளோரில் குற்றம்சாட்டப்பட்டுள்ளோர் தவிர்ந்த ஏனையோரை விடுதலை செய்வது என்று தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

தமிழக அரசின் தீர்மானத்தை முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் நேற்றுத் தெரிவித்தார்.

விவசாயிகள் கிளர்ச்சி தொடர்பாக அரசாங்க அதிகாரிகளும், விவசாயிகள் பிரதிநிதிகளும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னரே மேற்கண்டவாறு அரசு தீர்மானித்துள்ளது. (இ)




'அம்புஷ்'

சகல புழுக்களையும் அழிக்கவல்லது

உங்களது பயிர்களை அம்புஸ் உபயோகித்து பாதுகாருங்கள்.
வெங்காயம், மிளகாய் முதலிய பயிர்களை அறவே
அழிக்க விருந்த புழுவை கட்டுப்படுத்துவதற்கு
விமானமார்கமாக கொண்டுவரப்பட்ட அதி சிறந்த
கிருமிநாசினி அம்புஸ் ஆகும்.
இரண்டு திரவ அவுன்ஸ் அம்புஸ்சை
40 கலன் நீரில் கலந்து ஒரு
ஏக்கருக்குத் தெளிக்கவும்.




OG

CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1

# யாழ். நவீன சந்தை மலகூடங்களே கடையாக மாற்றப்பட்டன

## வர்த்தக உரிமையாளர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நவீனமார்க்கட்டில் நன்மதிப்பு பணம் பெற்று வழங்கப்பட்ட இரு அறைகளும், முன்னர் மலசலகூடங்களாகவே இருந்தன. இவ்விரு அறைகளும் கடைகளாக இருக்கவில்லை.

யாழ்ப்பாண நவீனசந்தை வர்த்தக உரிமையாளர் சங்கத் தலைவர் திரு த. சங்கரப்பிள்ளை, செயலாளர் திரு. க. முத்துலிங்கம் நேற்று கூட்டாக விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

இவ்விரு அறைகளும், முன்னர் 2400 ரூபாவிற்கு வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டதாகவும், பின்னர், திரும்ப வியாபாரிகள் அதனை ஒப்படைத்ததாகவும், மாநகரசபை ஆணையாளர் தெரிவித்திருப்பது தவறாகும். இவ்விரு அறைகளும், மலசலகூடமாகவே பாவிக்கப்பட்டுவந்தன.

நவீன மார்க்கட் நுழைவாயில்களும், மலகூடங்களும் கடைகளாக மாற்றப்பட்டுவருவதனால், அதன் அமைப்பு சீர்குலைவதுடன் கட்டடத்திற்கே ஆபத்து ஏற்படவும் கூடும்.

இன்னும் மிகுதியாக உள்ள நான்கு மலகூடங்களில் இரண்டு மட்டுமே பாவிக்கப்பட்டு வருகின்றன. மற்றவை பாவிக்கமுடியாத நிலையில் உள்ளன.

இந்த மாற்றங்களினால் வர்த்தகர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.)


**நாகம்ஸ்** (சுன்னாகம்) தினசரி 6-45, 10-00 விஜயகுமாரி நடித்த **தாயில்லாக்குழந்தை**

**Rio** (Jaffna) (phone:7607) Daily 4 shows: DENNIS WATERMAN in **SWEENEY**

**வெல்லி** (சாவகச்சேரி) தினசரி 6-30, 9-30 சிவாஜி - மஞ்சுளா **மனிதனும் தெய்வமாகலாம்**

**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த **நல்லநேரம்** (புதிய பிரதி)

**வெலிங்டன்** (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி - விஜயா **கிரகப்பிரவேசம்** (கலர்)

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7692 வெற்றிநடை போடுகிறது சிவபாதவிருதயர், சந்திரகலா நடித்த **தென்றலும் புயலும்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த **ஜானகி சபதம்**

வெற்றிகரமான 52 வது நாள் **மனோகரா** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ நடித்த **ஊருக்கு உழைப்பவன்**

**Regal** (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m. **Heroes of Telemark** (Colour)

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7648; தினசரி 10-30, 2-30, 6-30, 9-45 3-வது வெற்றிவாரமாக நடைபெறுகிறது! சிவாஜி நடிக்கும் **கந்தன்கருணை** ஈஸ்ட்மன் கலர்

தினசரி காலை 8-30 மணிக்காட்சி மட்டும் - கடைசி தினம் 23-4-78 சாளிசப்ளினின் வயறு குலுங்கச் சிரிக்கவைக்கும்படம் **'BEST OF CHARLIE CHAPLIN'**


## போயா தினத்தையொட்டி இன்று படக்காட்சிகள் இல்லை

## எம். பி. யைக் காக்க பொலிஸ் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)
குண்டசாலை எம். பி. திரு. டி. எம். சந்திரபால மீது தாக்குதல் நடத்த முயன்ற கூட்டத்தினரைக் கலைப்பதற்குப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்யவேண்டியேற்பட்டது.

இச்சம்பவம், எம். பி. திரு. சந்திரபால, விழா ஒன்றில் கலந்துகொள்ள வத்தேகம சென்றபோது நடந்தது. இச்சம்பவம் தொடர்பாகப் பொலிசார் சந்தேகத்தின்மீது இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

## மத்தியகுழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
கோப்பாய்த் தொகுதி தமிழ் இளைஞர்பேரவை மத்தியகுழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

கோப்பாய் எம் பி திரு சி கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் மாவை சேனாதிராஜா உட்பட பலர் உரையாற்றவுள்ளனர். (உ)

## யாழ். றேட்டரி நடத்தும் பஸ் நடத்துநர் தெரிவு கூப்பன்

போட்டி முடிவு தினம் 25-4-78

நடத்துநரின் பெயர் ..............................

பதிவு இலக்கம் ..............................

அனுப்புபவரின் பெயர் ..............................

அனுப்புபவரின் விலாசம் ..............................

திகதி .............................. ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்திசெய்து டாக்டர் பா. சோ. பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

## "பொலிஸார் மக்களின் எஜமானர்கள் அல்லர்"

### — இன்ஸ்பெக்டர் தாமோதரம்பிள்ளை

(அரியாலை)
"பொதுமக்களுக்கும்பொலிசாருக்குமிடையில் நட்பும், சுமூகமானஉறவும்வளரவேண்டியது மிக அவசியமாகும். பொலிசார் நாட்டிலே அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டியவர்களாவர். மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பும் பொலிசாரிடமே உண்டு. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொலிசார் நாட்டிலே தீய சக்திகளைக் கண்டுபிடித்து அமைதியாய் மக்களை வாழ வழி செய்யவேண்டும். பொலிசார் எசமானர்கள் அல்ல என்பதை பொதுமக்கள்மனதிற்கொண்டு அவர்கள் எமது நண்பர்கள் என்ற எண்ணத்துடன் அவர்களுடன் நெருங்கிப்பழகவேண்டும்".

இவ்வாறு சுன்னாகம்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரி. தாமோதரம்பிள்ளை உரும்பராய் மேற்கு ஸ்ரீவைத்தீஸ்வர சனசமூக நிலையத்தின் 23-வது ஆண்டு நிறைவு விழாவிலும் விளையாட்டுப்போட்டியிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. ச. துரோணாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற விழாவில் வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம் பேசுகையில், "விளையாட்டுப்போட்டிகள் மூலம் மக்களிடையே ஒற்றுமையும், ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளும்தன்மையும் ஏற்படுகிறது. இதன்மூலம் உடல்வளர்ச்சியும் உள வளர்ச்சியும் ஏற்படுகிறது" என்றார்.

கூட்டத்தில் திருவாளர்கள் இ. அருணம்பலம், ந. அரிகரத்தினம், எஸ். பீ. சிவானந்தம், கிராமசேவையாளர் தி. அ. க. கிருஷ்ணராசா ஆகியோரும் பேசினார்கள்.

திரு. கிருஷ்ணராசா போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கினார். (உ)

## இன்ஸ்பெக்டருக்கு அசிட்வீசிய பொலிஸ் கான்ஸ்டபிள் தற்கொலை?

(கொழும்பு)
பொலிஸ் இன்ஸ்பெக்டர் பீ பெரேராவிற்கு கான்ஸ்டபிள் ஒருவர் திராவகம் வீசிய சம்பவம்ஒன்று கரவனல்ல பொலிஸ் நிலையத்தில் நடந்துள்ளது.

பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவரும், அசிட் வீச்சுக்கு இலக்கானார்.

அசிட்டின் ஒரு பகுதியை அருந்தியதாககூறப்படும் அந்த கான்ஸ்டபிள் அவராது விடுதியில் பின்னர் மரணமாகியிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்டவிசாரணையொன்று நடைபெற்றது.

அக்கிராமத்தில்நடந்த ஒருதற்கொலை சம்பவம் தொடர்பான விசாரணையை தொடர்ந்து, கான்ஸ்டபிள் அசிட் போத்தலை வைத்திருந்தார் என விசாரணையில் தெரியவந்தது.

## "மன்றங்களின் வளர்ச்சி மக்கள் கரங்களில்"

### — விரிவுரையாளர் கணேசலிங்கம்

(யாழ்ப்பாணம்)
"ஒரு நூல்நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இக்கலைமன்றம் இன்று தையல் பாடசாலையாகவும் சிறுகைத்தொழில் நிலையமாகவும் சங்கீதப் பாடசாலையாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. இதற்காக இதன் அமைப்பாளர்களை நான் பாராட்டுகிறேன். ஊர்மக்களின் ஒத்துழைப்பின்றி எந்தவொரு மன்றமும் வளரமுடியாது. மாதர்களின் வளர்ச்சி இந்த நாட்டில் மிகவும் முக்கியமான வொன்று இதற்காக அனைத்துச் சக்திகளும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

இவ்வாறு புலோலி ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 16-வது ஆண்டுவிழாவிற்கும் பிரதம விருந்தினராக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய யாழ். வளாக விரிவுரையாளர் திரு கே. கணேசலிங்கம் தெரிவித்தார். மன்றப் போட்டிகளில் பரிசு பெற்ற சிறுர்களுக்குத் திருமதி கணேசலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

'சமய ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் யாழ். வளாகத்தைச் சேர்ந்த திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் வணபிதா ஜெயசீலன் திரு. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்றத்தலைவர் திரு. கோ. குமாரவேலு விழாவிற்குத் தலைமை வகித்தார்.

செல்வி யோகரஞ்சிதம் முருகேசு மன்றத்தின் ஆண்டறிக்கையைப் படித்தார். திரு. நெல்லை க. பேரன் மன்றத்தினை வாழ்த்திக் கவிதையொன்று படித்தார்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சியாக 'ஞானத்தவம்' என்ற நாடகமும் வல்வை நாடகமன்றத்தினரின் "சொன்னதைச் செய்யும் பண்டா" என்ற நகைச்சுவை நாடகமும் இடம் பெற்றன. (உ)

# நாவற்குழியில் ரயில்வே...

[1ம் பக்கத் தொடர்ச்சி] நிவர்த்தி செய்யவேண்டும்.

கமிஷனர்: இந்த ரயிலில் ரயில் நிலையங்களில் பார்சல்கள் ஏற்றப்படுவதால் இப்படி தாமதம் ஏற்படுகின்றது, கூட்டுஉற்பத்தியாளர் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் இதற்கு அவர்களிடமிருந்தும் ஆட்சேபம் வரலாம் எதற்கும் இன்றுகாலை சுன்னாகம் ரயில் நிலையத்திற்கு நேரில் சென்று பார்வையிட விரும்பினேன்.

கமிஷனர்: உறங்கலிருக்கைப் பெட்டியை மாற்றி 2-ம் வகுப்பு 'பேர்த்' ஏற்படுத்துவது பற்றி தங்கள் கருத்தென்ன?

யாழ். எம். பி. உறங்கலிருக்கை இருக்கவேண்டியது அவசியம்; அதே நேரம் 2-ம் வகுப்பு பேர்த்தையும் கொண்டு வரலாம்.

கமிஷனர்: ரயில்வே வேலைத்தளத்தை பரவலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதுளையில் மாதம் 25 வாகன்களை உருவாக்கிதர முடியும் என பதுளை எம். பி. தெரிவித்திருக்கிறார். இதற்கான நிலம் அங்கிருக்கின்றது அனுராதபுரத்தில் வேலைத்தளத்திற்கு போதிய அளவு நிலம் இருக்கிறது பெட்டிகளை இங்கு உருவாக்குவதற்கு வசதியாக மரவேலைப் பகுதி இருக்கின்றது. இந்தப் பரவலாக்கும் திட்டத்தில் யாழ்ப்பாணத்தின் பங்கு என்ன என்பதையும் அதற்கான ஆலோசனையையும் கூறுவீர்களா?

## திறமை மிக்க இளைஞர்கள்

யாழ் எம். பி. நாவற்குழியில் ரயில் பாதைக்கு சமீபத்தில் போதியளவு நிலம் இருக்கின்றது. வேலைத்தளத்தை அங்கு ஆரம்பிக்கலாம். அதுமட்டுமன்றி அனுபவம் வாய்ந்த திறமைமிக்க மெக்கானிக் தொழில் தெரிந்த இளைஞர்கள் இங்கு இருக்கிறார்கள் இங்கிருந்து ஓமானுக்குச் சென்ற யாழ். இளைஞர்களின் திறமைவாய்ந்த தச்சுவேலைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு தச்சு வேலைப் பாடசாலையும் உண்டு. திறமைமிக்கவர் இருக்கின்றனர்.

## சிங்களத் தகமை

யாழ். எம். பி: மற்றொரு முக்கிய விடயம், இங்குள்ள மூட்டை முடிச்சு சுமக்கும் உள்ளூர ரயில் போர்ட்டர்களுக்கு சிங்கள தகமை கேட்கின்றார்கள்.

கமிஷனர்: இந்த நிலைமை அவர்களால் ஏற்பட்டது. "போர்ட்டர், என்ற பெயர் காரணத்தினாலே, சிங்களத் தகமை கோரப்பட்டிருந்தது.

யாழ். எம். பி: இவர்கள் ஏழைத் தொழிலாளர்கள். சிங்களத் தகமையிலிருந்து நீக்கப்படவேண்டும்.

கமிஷனர்: போர்ட்டர் இடமாற்றத்திற்குரிய வேலை, அதனால் தான், சிங்களத்தகமை கேட்கப்பட்டுள்ளது.

யாழ். எம். பி: நடைமுறையில் அப்படியில்லை. அவர்கள் இங்குதான் வேலை செய்பவர்கள். அவர்கள் குறை நீக்கப்படவேண்டும். புங்கங்குளம் ரயில் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் போடப்படவேண்டும்;

கமிஷனர்: மாவட்ட பொறியியலாளர் நடைபாதைவரைக்கும், புங்கங்குளம் நிரந்தரக் கட்டிடம்பற்றியும் கவனிப்பார்.

## உறங்கல் இருக்கை

யாழ். எம். பி: உறங்கலிருக்கை பதிவுகள் 10 மட்டுமே யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்படுகிறது. 38 கொழும்பில் பதிவு செய்யப்படுகிறது. இதனால் பிரயாணிகள் கஷ்டப்படுகிறார்கள். கூடியளவு ஆசனங்கள் இங்கு பதிவு செய்யப்படவேண்டியது அவசியம். இன்று தேசிய அரசு பேரவை இருப்பதால், வடபகுதி எம். பிக்கள் கொழும்பு சென்றுவிட்டனர். கொழும்பில் விசாரணை நடக்கும்போது அங்கு சாட்சியம் அளிப்பார்கள்.

## இப்பகுதி மர நிலைமை

கமிஷனர்: இலங்கையில் மட்டுமல்ல, உலக நாடெங்கும் மரங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில், மர நிலைமைபற்றி மரடிப்போ மனேஜரிடம் கேட்டறியவேண்டும்.

திரு. பெர்னாண்டோ: ரயில் பெட்டிகள், கூட்டுறவுச் சங்கங்களும், டெண்டர் எடுத்துச் செய்யலாம்.

யாழ். எம். பி வேலைத்தலத்தில் இளைஞர்களுக்கு தொடர்ந்து வேலை இருக்குமா என அறிய விரும்புகிறேன்.

கமிஷனர்: மருதானையில் 600 பழுதடைந்த வாகன்கள் இருக்கின்றன. இவற்றைச் செய்யவே பலமாதங்கள் எடுக்கும். பதுளையில் 1 மாதம் 25 வாகன்களை உருவாக்கலாம். கூட்டுறவுச் சங்கங்களிடமோ ஸ்தாபனங்களிடமோ பெட்டிகள் செய்ய ஒப்பந்த அடிப்படையில் கொடுத்தால் சீக்கிரம் செய்து தருவார்கள். இதனால் பிரயாணிகள் கஷ்டங்களும் ஓரளவு குறையும்.

பஸ்களுக்கும், லொறிகளுக்கும் உள்ளூர் தொழிலாளிகள் பொடி அடிக்க முடியுமானால் ஏன் ரயில் பெட்டிகளை உள்ளூர் தொழிலாளர்களால் உருவாக்கமுடியாது? என்று கமிஷனர் கேட்டார்:

## அலுமினியம் உருக்குப்பெட்டி

மரத்தட்டுப்பாடு காரணமாக அலுமினியத்திலும் உருக்கிலும் ரயில்பெட்டிகளை உருவாக்குவதற்கு ஒரு ஆலோசனை இருந்துவருவதாகவும் கமிஷனர் கூறினார்.

விரைவில் இங்கு அலுமினிய ரயில் ஓடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்றும் அவர் கூறினார்.

அலுமினியம், உருக்கு ரயில் பெட்டிகளைத் தயாரிப்பது பற்றி தங்கள் ஆலோசனை என்ன என்று கமிஷனர் கேட்டபோது வரவேற்கக் கூடியது என யாழ். எம். பி. திரு வே. யோகேஸ்வரன் கூறினார். இதன்மூலம் பிரயாணிகளின் சஷ்டத்தைக் குறைக்கலாம் என்றும் கூறினார்.

(நேற்றைய சாட்சியங்களின் முழு விபரம் திங்கட்கிழமை "ஈழநாடு" இதழில் வெளிவரும்.)

---

## ஆசிரிய—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகார் செய்துள்ளனர்.

பயிற்சி வகுப்பு நடாத்துவதற்குக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியைப் பெறவில்லையென்றும் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலிப் பயிற்சிநிலையத்தில் வகுப்பு நடாத்த, திரு.காசிப்பிள்ளை அனுமதிபெறவில்லையெனப் பயிற்சிக் கலாசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பயிற்சி வகுப்பைக் கல்வி அமைச்சு மட்டுமே நடத்தலாமென்றும், தனிப்பட்டவர்கள் நடத்தமுடியாதென்றும், இப்படியான பயிற்சி வகுப்பு அரசின் கொள்கைக்கு மாறானது என்றும் கல்விப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. [ஈஅ

---

## அமைச்சர்கள்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சர் திரு ஈ எல் சேனநாயக்கா: இந்தியா, இங்கிலாந்து, நோர்வே.

கலாச்சார அமைச்சர் திரு ஈ எல் பி ஹூருல்லே: இந்தியா, ரஷ்யா.

கல்வியமைச்சர் திரு நிசங்கா விஜயரத்தின: இந்தியா நேபாளம் (தனிப்பட்ட விஜயம்) இந்தியா.

நிதியமைச்சர் திரு ரொனி டிமெல்: ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, இங்கிலாந்து, பார்படோஸ், அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் சுவிட்சர்லாந்து.

வெளிவிவகார அமைச்சர்: ஜனாப் ஏ சி எஸ் ஹமீத்: அமெரிக்கா, இங்கிலாந்து, லக்ஸம்பேர்க், பிரான்ஸ், ஜேர்மன் சமஷ்டிக்குடியரசு சுவிட்சர்லாந்து, டென்மார்க், கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து.

சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா: நியூஸிலாந்து.

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு சிறில் மத்தியூ இந்தியா, (தனிப்பட்ட விஜயம்)

நீர்ப்பாசனமின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு காமினி திசநாயக்கா; கொரியா.

நீதியமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம்: கனடா

தொழில் அமைச்சர் காப்டன் சி பி ஜே செனிவிரத்ன: பிலிப்பைன்ஸ்.

பாராளுமன்ற அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா: கனடா.

பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரம: இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ்: பெல்ஜியம், அயர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு.

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி: சீனா, தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம், பெல்ஜியம், இங்கிலாந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம் எச் முகமட்: இந்தியா.

### பிரதி அமைச்சர்கள்

பிரதி அமைச்சர்களின்: வெளி நாட்டு விஜய விபரம்-

பிரதி விவசாயக் காணி அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் இந்தியா (தனிப்பட்ட விஜயம்)

பிரதி கடற்றொழில் அமைச்சர் திரு: எஸ். சுனில் அபயசுந்தரா கியூபா.

பிரதி திட்டமிடல் பொருளாதார அமைச்சர் ஜனாப் நைனாமரிக்கார் நேபாளம், இந்தியா. பிரதி வெளி விவகார அமைச்சர் திரு அனில் விக்கிரமசிங்கா இங்கிலாந்து, மலேஷியா, தாய்லாந்து,

பிரதி சுகாதார அமைச்சர் திரு. தர்மசேன அட்டிகல இந்தியா தனிப்பட்ட விஜயம்)

பிரதி கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. டெனிசில் பெர்னாண்டோ தாய்லாந்து.

பிரதி தகவல், ஒலிபரப்பு அமைச்சர் திரு சந்திரா கருணாரத்தின யூகோஸ்லவியா.

பிரதி நீர்ப்பாசன, மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி இந்தியா (தனிப்பட்ட விஜயம்)

பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா குவாட்டர்.

பிரதி தொழில் அமைச்சர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா தாய்லாந்து.

பிரதி தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. அலுக் அலுவிகார: கனடா, இங்கிலாந்து.

பிரதி அபேரத்ன பலப்பிட்டிய. கனடா, இங்கிலாந்து

பிரதி புடவைக் கைத்தொழில் அமைச்சர் திரு தர்மதாசா பண்டா: பல்கேரியா

பிரதி வர்த்தக அமைச்சர் திரு எம் எஸ் அமரசிறி: சுராக், [ம இ]

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் தொழிற்சங்க கூட்டணியின் மேதின அமைப்புக் கூட்டம்இன்று காலையிலும், யாழ்ப்பாணத் தொகுதி கூட்டணி அமைப்பாளரது கூட்டம் மாலையும், வாராந்த கருத்தரங்கு இரவும் கூட்டணி பணிமனையில் நடைபெறுகின்றன.

ஃ ஃ

நீர்வேலி கந்தசுவாமி கோவில் தால இரதோற்சவம் இன்று இதை பொட்டிய மலரை இன்று பகல் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு வை. சொக்கலிங்கம் வெளியிட்டு வைப்பார். [ஒ]

## உயிரோடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிய பொலிசார் தெரிவித்தனர்

இதேவேளையில் இத்தாலிய அரசியல் கைதிகளை 48 மணித்தியாலத்தில் விடுதலை செய்யும்பட்சத்தில் தாம் முன்னாள் இத்தாலியப் பிரதமரை விடுதலைசெய்யத் தயாராக உள்ளதாக கடத்தல்காரர்கள் அறிவித்துள்ளனர். (இ)

---


வடமாகாண மக்களுக்கு ஒரு மணியான செய்தி!

இதோ விற்பனையாகிறது...

சர்வதேசப் புகழ்பெற்ற.. ...

CITIZEN-சிற்றிசன்

கைக்கடிகாரங்கள்...

★ DUNHILL - டன்ஹில்
சிகரெட்டுக்கள்...

★ மின்சார உபகரணங்கள்

மற்றும். தரத்தில் தன்னிகரற்ற இறக்குமதி செய்யப்பட்ட அநேக பொருட்கள் அனைத்துக்கும் நாடுங்கள்

சி.சின்னத்துரை அன்பிறதர்

39, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.
போன்: 284 — தந்தி: கல்கி



உறுதிகள், சான்றிதழ்கள், ஏனையபத்திரங்கள்
ஒரே நிமிடத்தில்
போட்டோ கொப்பிகள்
செய்து தரப்படும்.

பிரதி ஒன்று 9"X13" ரூபா 5/-
7"X12" ரூபா 4/-
7"X11" ரூபா 3/-

தொடர்பு கொள்ளுங்கள்:-

த பினன்ஸ் கொம்பனி லிமிட்.

191, மின்சார நிலையவீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7680



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna Telegram 'Eelanaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.